REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

பாகிஸ்தான் அ. நி. சபை வழக்கு

விசாரணை ஆரம்பம்

கராச்சி, டிச. 6—

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல், பாகிஸ்தான அரசியல நிர்ணய சபையைக் கலைத்தது சட்டவிரோதமான செயல் என்று சிந்து உயர் நீதிமன்றத்தில் மௌல்வி தமிசுதீன்கான் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு இன்று ஆரம்பமாயிற்று.

மனுதார் சார்பில், ஏ. ஐ. சுந்திரிகர், ஷர்புதீன் ஆகியோர் ஆஜராயினர். கவர்னர்-ஜெனரல் சார்பிலும், பாக். மந்திரிசபையின் சார்பிலும் அட்வகேட்-ஜெனரல் ஆஜரானர்.

மலர் 2] சென்னை: கார்த்திகை 22உ செவ்வாய் (7—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 23உ புதன் (8—12—54) [இதழ் 151

புறம்போக்கு நிலத்தில் குடியிருந்தவர்களை விரட்டல்

சர்க்கார் செயலுக்கு எதிராக ம. சோ. கட்சி ஆர்ப்பாட்டம்

போலீஸ் பாதுகாப்பில் 20 நபர்கள்

கோழிக்கோடு, டிச. 5—

இங்கிருந்து 18 மைல் தொலைவில் உள்ள பெரம்பாரா என்ற ஊரில் ம. சோ. கட்சியைச் சேர்ந்த 20 நபர்களை, மூன்று தினங்களுக்கு முன் போலீஸ் கைது செய்துள்ளது. அப்பகுதியிலுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலத்தில், சர்க்கார் அனுமதி பெறுமல் குடிசை கட்டிக்கொண்டு வாழ்ந்தவர்களை, அவ்விடத்திலிருந்து சர்க்கார் விரட்டிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

சர்க்காரின் போக்கைக் கண்டிக்கும் வகையில் ம. சோ. கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும், அதன் விளைவாக மேற்படி கட்சி நபர்களைப் போலீஸ் கைது செய்திருப்பதாகவும் நம்பப்படுகிறது.

சர்க்காரிடத்தில் அனுமதி பெறுமல், திரு-கொச்சியிலிருந்து இங்கு வந்துள்ள 30 குடும்பங்கள் வரை, அப்பகுதியில் குடிசை போட்டு குடியிருந்து வருவதாகவும் தெரியவருகிறது.

ஐந்தைந்துத் தொண்டர்களாக அணிவகுத்து மேற்படி நேரடி நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்தி வருவதாகவும், இதுவரை கைது செய்யப்பட்டத் தொண்டர்கள், படகாராவிற்குக் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

நிலைமையைச் சமாளிப்பதற்காக, அங்கு தக்க போலீஸ் பாதுகாப்புச் செய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தியும் தரப்பட்டிருக்கிறது.

குடும்பத் திட்டம்

புதுடில்லி, டிச. 6—

"குடும்பத் திட்ட ஏற்பாடுகளுக்காக மாநில அரசாங்கங்களுக்கும், தனிப்பட்ட நிறுவனங்களுக்கும் இதுவரை அனுமதிக்கப்பட்ட மானியத் தொகை முறையே ரூ. 1,48,844, ரூ. 1,76,134 ஆகும்," என்று, சுகாதார மந்திரி ராஜகுமாரி அம்ருத் கௌரி ராஜ்யங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

பர்மிய முன்னாள் மந்திரி கைது

சதி செய்ததாகக் குற்றச்சாட்டு

எதிர்த்து வாதிட இங்கிலாந்து வழக்கறிஞர்?

பர்மாவின் முன்னாள் மந்திரிகளுள் ஒருவரான யூ-பா-பே என்பவரையும், பிரபல வியாபாரியான தாராவாடி மௌங்-மௌங் என்பவரையும், 'இராஜத் துரோகக் குற்றத்திற்காக போலீசார் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது.

கைது செய்யப்பட்ட அந்த இருவரும், இன்னுஞ் சிலருடன், இப்போதுள்ள இராணுவத் தளபதியான ஜெனரல் நீவின் என்பவரை அணுகி, அரசாங்கத்தைக் கவிழ்க்கும் தங்களின் சதித் திட்டத்திற்கு உதவுமாறு கோரியதாக, பிரதமர் யூ-நு சென்ற அக்டோபரில் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருந்தார்.

பா-பே என்பவர், தம்மீது சுமத்தப்பட்ட குற்றங்களை "முட்டாள் தனமானது" என்று வர்ணித்தார்.

பாசிச எதிர்ப்பு மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், சதிக் குற்றச் சட்டத்தின் கீழ் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென சர்க்காரை வற்புறுத்தி வந்தனர்.

யுத்தத்திற்கு முன்பு ஒரு பிரபல அரசியல் வாதியாயிருந்த பா-பே, தன்னை ஒரு சுயேச்சைவாதி என்று கூறிக்கொள்கிறாராம்.

மக்கள் சபையில் உள்ள எதிர்க்கட்சியினர் அமைத்துள்ள "தேசப் பற்றுடையோர் முன்னணி"யில் ஒரு தீவிர அங்கத்தினருங்கூட பா-பே.

"மக்கள் சபையில், முதலில் எங்கள்மீது நம்பிக்கை இல்லாது செய்துவிட முனைந்தனர்; பின்னர், இப்போது மதத்தைக் காரணங் காட்டி, எங்களை பதவியிலிருந்து துரத்த முயற்சிக்கின்றனர்; அந்தக் கூட்டத்தின் தலைவர்தான் பா-பே,"

என்று, பர்மிய பிரதமர் யூ-நு பத்திரிகையாளரிடம் கூறினார்.

"இவர்கள் நாடு முழுதும் ஆர்ப்பாட்டக்காரர்களை அனுப்பி, பள்ளிகளில் மதபோதனை பற்றிய சர்க்காரின் உத்தரவை எதிர்த்து கலகம் விளைவிக்க முயன்றிருப்பதாக சர்க்காருக்குத் தகவல் கிடைத்துள்ளது," என்றும் அவர் கூறினார்.

அவர், இந்தக் கூட்டத்தவர் இனியும் தொடர்ந்து இவ்வித வேலைகளில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரித்தார்.

ஃ ஃ ஃ

கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் மந்திரியான 71 வயதுடைய யூ-பா-பேயும், 61 வயதான தாராவாடி மௌங் மௌங் என்பவரும், இன்னும் இதரும், ரங்கூன் மத்

(4-ம் பக்கம் பார்க்க)

எஸ். ஏ. வெங்கடராமய்யர் சிறையில் தள்ளப்பட்டார்

ஜாமீன் மறுக்கப்பட்டது; உடனே சிறைக்குப் பிரயாணம்

லஞ்சக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது

புது டில்லி, டிச. 6—

இந்திய சர்க்கார் வர்த்தக, தொழில் அமைச்சராலயத்தின் முன்னாள் செயலாளரான தோழர் எஸ். ஏ. வெங்கடராமன், ஐ. சி. எஸ். மீது லஞ்சம் வாங்கியதாகத் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு ஆறு மாத வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கை விசாரணை செய்த தனி நீதிபதி எஸ். பி. கபூர் இன்று தீர்ப்புக் கூறினார்.

[illegible]ணம் எதும் இன்றி தோழர் வெங்க[illegible]ன், பம்பாயிலுள்ள மில்லர் க[illegible] சுந்தர சாஸ் மில்ஸ் ஆகிய நிலையங்களிலிருந்து விலையுயர்ந்த பொருள்களைப் பெற்றுக் கொண்டார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

சர்க்கார் அதிகாரியாக இருந்த அவர், தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, நியாயமற்ற சலுகைகள் காட்டி, மேலே கூறப்பட்ட இரண்டு வர்த்தக நிலையங்களுக்கும், சுமார் ஒன்றரை கோடி ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை ஏற்றுமதி—இறக்குமதி செய்ய லைசென்சுகள் வழங்கினார் என்று அவர்மீது மேலும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அவர், மேற்படி கம்பெனிகளிடமிருந்து, ஒயின், கோட்டு, கால் சட்டைகள், புஷ் ஷர்ட்டுகள், டைகள், மூக்குக் கண்ணாடிகள், போட்டோ பிரேம்கள், மரச் சாமான்கள், பாத்திரங்கள், பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டதாகக் கூறப்பட்டது. இச்சாமான்களின் மதிப்பு சுமார் ரூ. 16,000 இருக்குமென்று சொல்லப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, வெங்கடராமன் இச்சாமான்களை தக்க காரணமின்றி பெற்றுக் கொண்டார் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்.

55 வயதுடைய வெங்கடராமன், தனது குற்றச்சாட்டுகளை மறுத்தார்.

அவர், சென்ற ஆண்டு செப்டம்பரில் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

சர்க்கார் தரப்பில் 100 சாட்சிகளும், எதிரி தரப்பில் 10 சாட்சிகளும் விசாரிக்கப்பட்டனர்.

பஞ்சாப் உயர்நீதிமன்றத்தில், வெங்கடராமன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஜாமீன்மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்து, கைதியை ஜாமீனில்விட இயலாது என்றும், தேவை என்றால் நாளையே அப்பீலை விசாரிக்கத் தயார் என்றும் நீதிபதி குறிப்பிட்டார்.

ஆறுமாத சிறைத் தண்டனை பெற்ற வெங்கடராமன் மற்ற கைதிகளுடன் போலீஸ் வானில் சிறைச்சாலைக்கு உடனே அழைத்துச் செல்லப்பட்டார்.

சட்டசபை முன் தி. மு. கழக தோழர் மறியல்

சென்னை மாவட்டச் செயலாளர் மறுப்பும் - விளக்கமும்

சென்னை, டிச. 7—

"6—12—54 திங்களன்று மாலை, சென்னை சட்ட சபை முன்பாக 'கவர்னர் சம்பளத்தைக் குறைக்க'க் கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய தி. மு. கழகத் தோழர் கைது" என்று வெளியாகியுள்ள செய்தி குறித்து, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார் :—

"6—12—54-ம் நாளன்று சென்னை சட்ட சபை கூட்டத்தின்போது, சட்ட சபை வாயிலில் செல்லப்பா என்ற பெயருடைய ஒருவர் தி. மு. கழகக் கொடியுடன், 'கவர்னர் சம்பளத்தைக் குறைக்க வேண்டு'மென்று முழக்கமிட்டு, ஆர்ப்பாட்டம் செய்ததாகவும், அவரை போலீசார் கைது செய்து காவலில் வைத்திருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

"கவர்னர் சம்பளம் குறைப்பது குறித்து, தி. மு. கழகம் தனது பொதுக் குழுவில் விவாதித்த பின்னரே போராட்டத்தில் இறங்குவதைப் பற்றி முடிவு செய்யும் எனப் பொதுச்செயலாளர் அவர்கள் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

"இதனைக் கழகத் தோழர்கள் மட்டுமல்லாது மாற்றுக் கட்சியினரும், அரசியலாரும், பொது மக்களும் நன்கறிவர்.

"இந்நிலையில், செல்லப்பா என்பவர் இவ்வித ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. அவர் தி. மு. கழக உறுப்பினர்தான் என்பது உறுதியாக்கப்பட்டால், அவர் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

"எது எவ்வாருயினும், அவரின் செய்கை தி. மு. கழகத்தை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்பதுடன், அதிகாரபூர்வமானதுமல்ல என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்."

[குறிப்பு :— செல்லப்பா என்பவரை 'நாடோடி' செல்லப்பா என வழங்குவது உண்டென்றும், மேற்படியார், மதுரை மாவட்டம் பெரியகுளம் தாலுகா சிலையம்பட்டி எனும் சிற்றூரைச் சேர்ந்தவரென்றும், தமிழ் நாடக சபை என்ற பெயரிய சபையில் தொடர்புடையவரென்றும் அவரைக் குறித்து விவரம் கிடைத்திருக்கிறது எழும்பூர் கவுரவ மாஜிஸ்திரேட் கோர்ட்டில் இன்று விசாரிக்கப்பட்டு, அவர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.]

மதுவிலக்கின் போக்கு!

ஆராய திட்டக் கமிஷன் குழு நியமிக்கும்

புதுடில்லி, டிச. 6—

மதுவிலக்கின் நடைமுறை பற்றி ஆராய திட்டக் கமிஷன் குழு ஒன்றை நியமிக்க முடிவு செய்திருக்கிறது என்று மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் திட்ட இலாகா உதவி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

குழுவின் உறுப்பினர்கள் நியமனம் பற்றியும், குழு ஆராய வேண்டிய பிரச்சினைகளும் ஆலோசனையில் இருப்பதாக அமைச்சர் மேலும் கூறினர்.

சீனக் கலாச்சார குழுவினர் வருகை

புதுடில்லி, டிச. 6—

சீனக் கலாச்சாரத் தூதுக் குழுவினர் இன்று மாலை புதுடில்லி வந்து சேர்ந்தனர். இக் குழுவில் 44 பேர்கள் உள்ளனர். சீன சர்க்காரின் கலாச்சார உதவி அமைச்சர் சான்-சென்-டோ இக் குழுவிற்குத் தலைவர்.

பண்டித நேருவின் மகளும், வரவேற்புக் குழுவின் தலைவியுமான இந்திரா காந்தி, அமைச்சர் ஏ. கே. சந்தா, இந்தியாவில் உள்ள சீனத் தூதுவர் ஆகியோர் விமான நிலையத்தில் குழுவினரை வரவேற்றனர்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 7—12—1954 செவ்வாய்

ஏழையை மறந்தார்கள்!

இந்திய உப கண்டத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் பண்டித நேருவின் மந்திரி சபையில் அடிக்கடி கருத்து வேற்றுமைகள் காணப்படுவதும், பின்னர் அந்தக் கருத்து வேற்றுமைகள் மறைந்துவிட்டதாகச் சொல்லப்படுவதும், சாதாரண நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டன.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அமைச்சர் ஒருவர் இராஜினமாச் செய்யப் போகிறார் என்று செய்தி வருகிறது.

பல சமயங்களில், சமரசம் ஏற்பட்டுவிட்டது என்றும், சில சமயங்களில், அமைச்சர் இராஜினமாச் செய்துவிட்டார் என்றும் செய்திகள் வருவதைப் பொதுமக்கள் அறிந்துள்ளார்கள்.

சில திங்களுக்கு முன்னர், இந்திய சர்க்காரில் அமைச்சராக இருந்த கிரி அவர்கள், தொழில் கொள்கையில் இந்திய மந்திரிசபையுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக இராஜினமா செய்தார்.

"மந்திரி சபையில் நான் நீடித்திருப்பதால், தொழிலாளர்களுக்கு நன்மை எதும் செய்ய முடியாது என்று கருதுகிறேன்," என்று அவர் அப்போது அறிக்கை விடுத்தார்.

சில நாட்களுக்கு முன்னர், இந்திய சர்க்காரிலுள்ள அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தனது பதவியை இராஜினமா செய்யப் போகிறார் என்று கூறப்பட்டது.

'இந்திய சர்க்காரின் தொழில் கொள்கையில், டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு ஏற்பட்டிருக்கிற வெறுப்புதான் இதற்குக் காரணம்,' என்று சொல்லப்பட்டது; ஆனால், 'இந்தக் கருத்து வேற்றுமைகளைப் பண்டித நேரு மிகவும் சாமர்த்தியமாகத் தீர்த்து வைத்துவிட்டார்,' என்று, சொல்லப்படுகிறது.

இந்தியாவின் தொழில் அதிபரான பிர்லா ஸ்தாபனத்தாருக்கு இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க இந்திய சர்க்கார் அனுமதி மறுத்தது குறித்து, நேருவின் மந்திரி சபையில் பலத்த கருத்து வேற்றுமைகள் நிலவுகிறதென கூறப்பட்டது.

இந்தியாவின் முன்னேற்றத்திற்குத் திட்டமிடுவதற்கு அமைக்கப்பட்டிருக்கும் திட்டக் கமிஷனுக்கும், நேரு சர்க்காருக்கும் உறவுமுறைகள் சரியில்லை என்றும் கூறப்படுகிறது.

தனிப்பட்ட முதலாளி ஒருவரின் பேராசைத் திட்டங்களுக்கு, சர்க்கார், அனுமதியும் ஆதரவும் தரும் பிரச்சினையில், நேருவின் மந்திரி சபை ஒருமுறை ஆட்டம் கொடுத்துவிட்டிருக்கிறது.

பண்டித நேருவோ, தான் சோஷலிசப் பாதையை நோக்கிச் செல்வதாக வலியுறுத்திப் பேசுகிறார்.

ஆனால், பண்டித நேருவின் தலைமையில் உள்ள அமைச்சர்களிடையே மக்களின் முன்னேற்றத்திற்கான பிரச்சினைகளில் ஒருமித்த கருத்து நிலவுவதாகத் தெரியவில்லை!

'தனிப்பட்ட முதலாளிகளின் கையில் நாட்டின் முக்கிய தொழில்களை ஒப்படைக்க மாட்டோம்; அவ்வாறு ஒப்படைப்பது, நாங்கள் 1948-ம் ஆண்டில் வெளியிட்ட தொழில் கொள்கைக்கு முரண்பாடானது,' என்று, பண்டித நேரு பேசுகிறார்.

'உள்நாட்டுத் தொழில் அபிவிருத்திக்கு ஊக்கமளிப்பது தான் எங்கள் நோக்கம்,' என்கிறார்; ஆனால், அனுதினமும், வெளிநாட்டு மூலதனத்தைத் தேடி அலைகிறார்கள்.

'சீனவுக்குச் சென்று வந்தேன்; பிரம்மாண்டமான திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்; சீன மக்களின் சாதனை மகத்தானது,' என்று பண்டிதர் வாயாரப் புகழ்கிறார்; ஆனால், 'சீனவும், ரஷியாவும் தொழில் அபிவிருத்திக்காக எடுத்துக் கொண்ட முறைகள், இந்தியாவில் பயன்படாது' என்றும் அதே நேரத்தில் கூறுகிறார்.

பொது மக்கள் நன்கு அறிவார்கள்—நாள்தோறும் புதுடில்லியில் மாநாடுகள் நடைபெற்றவண்ணம் இருக்கின்றன — விவசாயத் திட்ட மாநாடு, ஆகாரக் கல்வி [illegible] தேசிய அபிவிருத் [illegible] என [illegible]ப்படிப் பலவித மாநாடுகள் நடைபெறுகின்றன. எல்லா மாநாடுகளிலும் பண்டிதர் கலந்துகொள்கிறார்; ஆணித்தரமான சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறார். இப்போது அவரே இந்த மாநாடுகளைக் கண்டு சலித்துப் போகிறார்.

'ஒரே மாநாடு மயமாக இருக்கிறதே: இதைக் கொஞ்சம் குறைக்க வேண்டும்,' என்று பேசுகிறார்.

அவரே, 'தேவையற்றது,' என்று கூறும் மாநாடுகளில், நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மத்திய அமைச்சர்கள், இராஜ்ய அமைச்சர்கள், அதிகாரிகள், நிபுணர்கள் ஆகியோர் கலந்து பேசுகிறார்கள்—என்ன செய்யலாம்; எப்படி திட்டங்களை நிறைவேற்றலாம்; பணம் இருக்கிறதா; இல்லை என்றால் கடன் எழுப்பலாமா; புதிய வரி ஒன்றை விதிக்கலாமா—என்றெல்லாம், அவர்கள், அம்மாநாடுகளில் பரிசிலனை செய்கிறார்களாம்.

ஆனால், இந்திய சர்க்காரின் திட்டக் கமிஷனே மிகவும் மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கிறது. "இந்திய சர்க்கார், முக்கிய பிரச்சினைகளிலும், தொழில் அபிவிருத்திக்கான திட்டங்களிலும் தன்னிடம் கலந்துகொள்வதில்லை;" என்று, அக்குழு கருதுகிறதாம்.

திட்டக் கமிஷன் அவசியமின்றி ஏற்படுத்தப்பட்ட அமைப்பல்ல—நாட்டின் முன்னேற்றத்திற்குத் திட்டமிடவே அமைக்கப்பட்டது; ஆனால், நேரு சர்க்கார், முக்கியப் பிரச்சினைகளில் — குறிப்பாகத் தொழில் அபிவிருத்திப் பிரச்சினைகளில், திட்டக் கமிஷனைக் கலந்துகொள்ளாது காரியமாற்றுகின்றனர் என்றால், நாட்டின் முன்னேற்றத்தையும், நாட்டு மக்கள் வாழ்வின் உயர்வையும் கருத்தில் கொள்ளாதவர்கள்தான், நேருவின் மந்திரி சபையிலே இருக்கிறார்கள் என்று கூற முடியும்.

கூட்டுப் பொறுப்பும், கொள்கையில் ஒற்றுமையும், அதே நேரத்தில் ஏழையின் வேதனை ஒழிய வேண்டுமென்ற நோக்கமும் பண்டித நேருவின் மந்திரி சபையிலே காணப்படவில்லை என்று கூறலாம்.

'ஏழையின் வாழ்வு உயர வேண்டும்'—சிலர் இப்படி எண்ணுகிறார்கள்.

'முதலாளியின் ஆதரவு நம்மை விட்டுப் போய்விடும்'—இப்படிச் சிலர் நினைக்கிறார்கள்.

'நாம் செய்வதுதான் சரி; மற்றவர்களை ஏன் கலந்து கொள்ள வேண்டும்?'—என்று சிலர் கருதுகிறார்கள்.

இப்படிப்பட்ட மனப்பான்மை கொண்டவர்கள் நிறைந்துள்ள. மந்திரி சபையிலே, கூட்டுப் பொறுப்பு ஏற்படுவதென்பது அரிதானதேயாகும்.

கூட்டுப் பொறுப்பும், கொள்கையில் ஒருமித்த கருத்தும் இல்லை என்பதால்தான், நேருவின் மந்திரி சபையில் அடிக்கடி வெளியேறும் படலமும், உள்நுழையும் படலங்களும் நடைபெற்றவண்ணமுள்ளன.

இதன் காரணமாகவே, புதுடில்லியில் பல மாநாடுகள் நடந்தும், திட்டக் கமிஷன், தனது பணியைச் சரிவரச் செய்ய இயலாமல் போய்விட்டதுதான் [illegible] றலாம். [illegible] அனைத்துக்குமே இரண்டு காரணங்களைத்தான் நேரு மந்திரிசபையின் போக்கைக் கவனிப்போர் கூறுகிறார்கள்.

"பண்டித நேருவின் சர்க்கார், முதலாளிகளுக்குப் பயப்படுகிறது!"

"பண்டித நேருவின் மந்திரி சபை, ஏழைகளை மறந்துவிட்டது!"

முதலாளிகளைக் கண்டு அஞ்சாமல், ஏழைகளை நினைவில் கொண்டு திட்டமிடும் வலிமை, நேருவின் சர்க்காருக்கு இல்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை!

அமெரிக்கா - பிரிட்டன் டெலிபோன் இணைப்பு

கனடாவுக்கும், பிரிட்டனுக்குமிடையே கம்பிமூலம் டெலிபோன் இணைப்புச்செய்ய 10,00,000 பவுன் மூலதனத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பிரிட்டிஷ் தொழிற்சாலை இப்போது உற்பத்தி துவங்கிவிட்டது. தேம்ஸ் நதிக்கரையில் ஏற்படுத்தப்பட்ட இந்தக் கம்பெனி, ஸ்காட்லந்திலிருக்கும் ஒபானிலிருந்து நியூபவுண்ட்லந்திலுள்ள கிளாரன்வில்லிக்கு (சுமார் 2,250 மைல்கள்) கடல் மட்டத்திற்கு $2\frac{1}{2}$ மைல் ஆழத்தில் 'கேபிள்' வைத்து இணைக்கும். கிளாரன்வில்லியிலிருந்து 318 மைல் தூரத்திலுள்ள நோவாஸ்கோஷியாவுக்கு இணைப்புக் கொடுத்து, அங்கிருந்து நியூயார்க் நகரத்துடன் தொடர்பு ஏற்படுத்தும் இரட்டைக் கம்பிப் போக்குவரத்துள்ள இதன் மூலம், ஏககாலத்தில் 35 பேச்சுவார்த்தைகள் நடத்த முடியும்.

மத்திய மந்திரி சபையில் பிளவு!

திட்டக் குழுவிலும் கருத்து வேற்றுமை இடம் பெறுகிறது!

இந்தியப் பேரரசின் மந்திரிகளிடையே தொழிற்கொள்கை குறித்து வளர்ந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் சென்ற சில நாட்களாய் உச்சம் பெற்று நின்றன என்பது நாடறிந்த ஒன்று தானே?

இந்தக் கருத்து வேறுபாடுகள், தேசீயத் திட்டக் குழுவிலும் இடம் பிடித்திருக்கின்றனவாம்.

திட்டக்குழுவினர், சர்க்காரின் தொழிற்கொள்கையில் மட்டுமின்றி இதர அடிப்படைக் கொள்கைகளிலும் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனராம்.

தொழில் கொள்கைபற்றி மந்திரி சபையில் விரிந்துள்ள பிளவு பற்றியோ, அன்றி வேறெவ்வித முரண்பாடுகள் குறித்தோ, திட்டக் குழு கலந்தாலோசிக்கப்படுவதில்லை என்ற ஒரு பெருங் குறையிருப்பதாக திட்டக் குழுவினர் அதிருப்தி கொண்டுள்ளனராம்.

இன்னும், கம்பெனிச் சட்டத்திற்கான திருத்தம், அரசியல் சட்டத்திற்கான திருத்தம் இவைபற்றியும் திட்டக்குழுவின் கருத்து கேட்கப்படவில்லை என்ற குறையால் முறைத்துக் கொண்டுள்ளனராம் திட்டக் குழு உறுப்பினர்கள்.

திட்டக் குழுவினர் தயாரிக்கும் இந்த குற்றச்சாட்டுக்கள், இந்திய சர்க்காரின் துணை இயக்கமாகவே, திட்டக் குழு இயங்க விரும்புகிறது என்று எண்ணுகிற நிலைக்கு வளர்ந்துள்ளனவாம்.

ஏறத் தாழ திட்டக்குழு, மந்திரி சபையின் ஒரு உப குழுவாக மதிக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் நிலவுவதாகக் கூறப்படுகிறது.

இந்த முறைப்புகளினலும், திருப்தியற்ற சூழ்நிலைகளினலும் ஐந்தாண்டுத் திட்டம் வெகுவாகப் பறிக்கப்பட்டுள்ளதென்றும் அஞ்சப்படுகின்றதாம்.

திட்டக் குழுவில் அங்கம் வகிக்கும் மூன்று மந்திரிகளும், திட்டம் தீட்டுவதற்கு தங்கள் முழு உழைப்பினையும் தர இயலாதவர்களாயுள்ளனர். அதனல் எஞ்சியுள்ள இரு உறுப்பினர்கள் மட்டும், திட்டம் தீட்டுகிற பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாயும், அப்படி அவர்களிருவரிடமே முழுப் பொறுப்பையும் ஒப்படைப்பதென்பது சரியானதுதானா என்ற சந்தேகம் எழுவது நியாயமே எனக் கருதப்படுகிறது. ஏனெனில் இருவரும் வயோதிகர்களாகும்.

ஜாதி வேற்றுமை காட்டுவோர்

தண்டிக்கப்படுவர்!

"பொது இடங்களில் ஜாதி வேற்றுமைகளை நிலை நாட்டும் எவ்வித மனப்பான்மையும் தண்டனைக்குள்ளாகும் குற்றமாகும்," என்று நேப்பாள ஆலோசனை சபை மசோதா ஒன்றை நிறைவேற்றியது.

"நேப்பாளத்தில் சீக்கிரமே சிவில் உரிமைகள் மசோதா கொண்டு வரப்படும்," என்று, இம் மசோதா பற்றி பேசுகையில், உள்நாட்டிலாகா அமைச்சர் தங்கப்பிரசாத் கூறினர்.

இந்த மசோதாவில் உள்ள 'தீண்டப்படாதவர்கள்' என்ற சொல்லை நீக்கிவிட திருத்தம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. ஆகவே, பொது இடங்களில் இனி எவ்வித ஜாதி வேற்றுமையும் அனுமதிக்கப்பட மாட்டாது.

பொது இடங்களில் வேற்றுமை காட்டுவோரைத் தண்டிக்க வேண்டுமென்று இந்த மசோதா கூறுகிறதேயன்றி, எவ்விதமான தண்டனை என்று குறிப்பிடவில்லை.

'அகதி'யே அகதி இலாகா மந்திரியாகிறார்

புதுடில்லி, டிச. 5—

இந்திய சர்க்கார் அகதிகள் குடியமைப்பு இலாகா அமைச்சராக மேகர் சந்த் கன்ன நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

இவர், தற்சமயம் அந்த இலாகாவில் ஆலோசகராகப் பணியாற்றி வருகின்றார்.

இந்தியா—பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர், மேற்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்து குடியேறின அகதிகளுள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் காரணத்தினல், அவர், அகதிகள் குடியமைப்பு இலாகா அமைச்சராக நியமிக்கப்படுவது பொருத்தமானதே என்று பாராளுமன்ற வட்டாரங்களில் கருதப்படுகிறது.

வறுமையிலிருந்து விடுதலை!

வெள்ளை நைல் நதிக்கும் நீல நைல் நதிக்குமிடையே சுமார் ஐம்பது லட்சம் ஏக்கரா வரண்ட பூமியை சிறந்த விளைநிலமாக்க முயற்சி நடந்தது. இந்தப் பகுதியில், மக்கள், நிலத்தை நம்பிக் 'காலத்தை ஓட்டி' வந்தார்கள். அங்கு சுபீட்சம் தழைக்கச் செய்ய நிபுணர்கள் சிந்தித்தார்கள். நீர்ப்பாசன வசதியுடன் திட்டமிட்டுப் பயிரிட்டால் பருத்தி சாகுபடி செய்ய முடியுமெனத் தெரிந்தது.

நைல் நதிக்குக் குறுக்கே அணைக் கட்டும், பாசன வசதிக்காக 5000 மைல்கள் நீளத்திற்கு வாய்க்கால்களும் ஏற்படத் திட்டம் உருவாயிற்று. மக்களும் பயனறிந்து திட்டத்தை ஆதரித்தார்கள்.

நிலப் பிரபுத்துவமின்றி, கூட்டுறவு முறையில் 30,000 விவசாயிகள் பயிரிடுகிறார்கள். பருத்தி ஏற்றுமதியினல் கணிசமான அளவுக்கு நாட்டு வருமானம் பெருகியுள்ளது சுமார் ஐந்து லட்சம் மக்கள் — திட்டத்தினல் — பயனடைகிறார்கள்.

சுதந்திரமான விவசாயம், வாழ்க்கை நிலை உயர்வு, வியாபார அனுபவம் எனப் பல துறைகளில், இந்தத் திட்டத்தினல், மக்களுக்கு பலன் கிடைப்பதால் இதை விவசாய அபிவிருத்தித் திட்டம் என்பதைவிட அரசியல் கல்வித் திட்டம் — முன்னேற்றத் திட்டம் எனக் கூறுவதே பொருந்தும்.

தீண்டாமையை ஒழிக்கத் திட்டம்

சென்னை மாநிலத்தில் தீண்டாமை ஒழிப்புக்கான 'இரண்டு ஆண்டுத் திட்டம்' ஒன்றைத் தயாரித்திருப்பதாக மந்திரி திரு. பரமேஸ்வரன் கூறியிருக்கிறார்.

1954, 55—1955, 56 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் தீண்டாமை ஒழிப்புக்காக தீட்டப்பட்டுள்ள இந்த 'இரண்டாண்டுத் திட்டத்'திற்கு ஆண்டுதோறும் ரூ. 6 இலட்சம் செலவாகுமென்றும், இத்திட்டத்தை அங்கீகரிக்குமாறு மத்திய சர்க்காரை கோரியுள்ளதாயும் அவர் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

1952—53-ம் ஆண்டிற்கு, இந்த வேலைக்காக மத்திய அரசாங்கம் சென்னைக்கு எவ்வித பணமும் தரவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

1953-54ம் ஆண்டில், ரூ. 15,000 தீண்டாமை ஒழிப்பு வேலைக்காகக் கிடைத்ததாயும், இத்தொகை முழுவதும், 20 அரிசன குடும்பங்களுக்கு மேல் வசிக்கும் கிராமங்களில் பலதர உபயோகத்திற்கான பொது மேடைகள் அமைப்பதற்காகச் செலவிடப்பட்டதாயும் அவர் விவரம் கூறினர்.

இலங்கையில் ஆசைத்தம்பியின் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள்

ஈழம் முழுவதும் தி. மு. க. முழக்கம்

கொழும்பு :

7—11—54 மாலை 4 மணிக்கு நாராயணகுரு மண்டபத்தில் கொழும்பு நகரக் கிளைகளின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தோழர் பி. தம்பித்துரை தலைமை தாங்கினர். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, டி. இராசன், இரா. அதி. மணி, என். கதிரவன் ஆகியோர் பேசினர்.

8—11—54 மாலை கிராண்ட்பாஸ் கிளையின் சார்பில், தோழர் ஆசைத்தம்பிக்கு ஒரு தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

9—11—54 காலை கொழும்பு மத்திய கல்லூரியின் சார்பில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் தோழர் ஆசைத்தம்பி சொற்பொழிவாற்றினர்.

10—11—54 காலை கொழும்பு சேதவத்தை, போரல் ஆகிய கிளைகளின் சார்பில் தோழர் ஆசைத்தம்பிக்கு ஒரு விருந்து நடைபெற்றது.

11—11—54 மாலை தெமட்டக்கொட கிளையின் சார்பில் ஒரு தேநீர் விருந்து நடைபெற்றது.

12—11—54 காலை கொள்ளுப்பட்டி அண்ணா மன்றத்தின் சார்பில் ஒரு தேநீர் விருந்து நடைபெற்றது.

நீர்கொழும்பு :

13—11—54 பிற்பகல் 2 மணியளவில் நீர்கொழும்பு இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் நாகராஜு தலைமையில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

கொச்சிக்கடை :

13—11—54 மாலை 4 மணிக்கு நீர்கொழும்பு கொச்சிக்கடை நகர மண்டபத்தில் இலங்கை தி. மு. கழக கொச்சிக்கடை கிளையின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் இரா. அதி. மணி தலைமை தாங்கினர். தோழர்கள் ஆசைத்தம்பி, டி. எம். பீர்முகம்மது, கலாநேசன், கதிரவன், அன்பழகன், திருமாறன், மீரூசா முதலியோர் பேசினர்.

அவிசாவிளை :

14—11—54 காலை பதுளை செல்லும் வழியில் அவிசாவிளை இலங்கை தி. மு. க. கிளையின் சார்பில் தோழர் என். ஆர். பாண்டியன் தலைமையில் ஒரு வரவேற்பு விருந்து நடைபெற்றது.

இரத்தினபுரி :

பிற்பகல் 1 மணிக்கு இரத்தினபுரி கிளையின் சார்பில் தோழர் அண்ணாதாசன் தலைமையில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

பண்டாரவளை :

அன்று மாலை 4 மணிக்கு பெட்டிக்கலை பலாங்கோடை கிளையின் சார்பில், தோழர் இ. இராமர் தலைமையில் பண்டாரவளையில் ஒரு வரவேற்பு நடைபெற்றது.

பதுளை :

இரவு 7 மணிக்கு பதுளை மாவட்ட இ. தி. மு. க. 7 கிளைகளின் சார்பில் தோழர் தங்கராசன் தலைமையில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு :

15—11—54 பிற்பகல் மட்டக்களப்பு பகுத்தறிவியக்கத் தோழர்களின் சார்பில் ஒரு வரவேற்பு நடைபெற்றது.

16—11—54 காலை மட்டக்களப்பு வின்செண்ட் கல்லூரி மாணவர்களின் கூட்டத்தில் ஒரு சொற்பொழிவாற்றினர்.

பிற்பகல் 2 மணியளவில் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சிலப்பதிகாரம் பற்றி ஒரு சொற்பொழிவாற்றினர்.

மாலை 5-30 மணிக்கு மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்கத்தின் சார்பில், நகர மண்டபத்தில், டாக்டர். சிவலிங்கம் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆசைத்தம்பி, "தமிழர் நாகரிகம்" என்னும் பொருள் பற்றிப் பேசினர்.

நானு ஓயா :

17—11—54 மாலை நானு ஓயா தோழர் ஹென்றி போஸ் தலைமையில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

மார்க்காஸ் தோட்டம் :

இரவு 7 மணிக்கு மார்க்காஸ் கிளையின் சார்பில், தோழர் என். கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, டி. எம். பீர்முகமது, இரா. அதி. மணி ஆகியோர் பேசினர்.

நுவரேலியா :

18—11—54 காலை நுவரேலியா இயக்க அனுதாபிகளின் சார்பில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

கம்பளை :

அன்று மாலை 3 மணியளவில் கம்பளை பரி ஆண்ட்ரூஸ் கல்லூரி தமிழ் மன்றத் தலைவர் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

புசல்லாவ :

இரவு 7 மணியளவில் புசல்லாவ, இ. தி. மு. கழகக் கிளையின் சார்பில், தோழர் எம். ஏ. செல்லமுத்து தலைமையில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

ஹட்டன் :

19—11—54 மாலை ஹட்டன் கிளைக் கழகங்களின் சார்பில், தோழர் கே. கே. பாட்சா தலைமையில் ஹைலண்ட்ஸ் மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஊர்வலமும், மாலை அணிவிப்புகளும் நடைபெற்றன. கூட்டத்தில், தோழர்கள் ஆசைத்தம்பி, இரா. அதி. மணி, வனசிங்க (சிங்களவர்) துரைச்சாமி, பாக்கியம் முதலியோர் பேசினர்.

தலவாக்கொல்லை :

20—11—54 மாலை தலவாக்கொல்லை தி. மு. கழக கிளையின் சார்பில் நகராட்சி மன்ற உறுப்பினர் தோழர் பாண்டியன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஊர்வலமும், மாலை அணிவிப்புகளும் நடைபெற்றன. தோழர்கள் ஆசைத்தம்பி, ஆர். ஏ. மணி, ஜெயராமன் ஆகியோர் பேசினர்.

பதுளை :

மாலை 7 மணிக்கு பதுளை கிளைகளின் சார்பில், தோழர் எம். வி பி. சாமி தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆசைத்தம்பி, இரா. அதி. மணி, பீர் முகமது, கதிரவன், கலாநேசன் ஆகியோர் பேசினர்.

இரத்தோட்டை :

21—11—54 காலை 8-30 மணியளவில் இரத்தோட்ட இலங்கை தி. மு. கழக கிளையின் சார்பில், தோழர் வி. நாகரெத்தினம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆசைத்தம்பி, டி. எம். பீர்முகமது, இரா. அதி. மணி, கலாநேசன், கதிரவன் ஆகியோர் பேசினர்.

கண்டி :

பிற்பகல் 2 மணி யளவில் கண்டியில் மாயாவ, அந்தோணிமலை கிளைக் கழகங்களின் சார்பில், தோழர் கே. டி. மதியழகன் தலைமையில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆசைத்தம்பி பேசினர்.

கொழும்பு :

மாலை 4-30 மணியளவில் சேதவத்தை கிளையின் ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா. அதி. மணி தலைமை தாங்கினர். தோழர்கள் ஆசைத்தம்பி, டி. எம். பீர் முகமது, கலாநேசன், கதிரவன் ஆகியோர் பேசினர்.

22—11—54 காலை தலைமைக் கழகத்தின் சார்பில் ஒரு தேநீர் விருந்து நடைபெற்றது.

பிரியாவிடை

மாலை கொள்ளுப்பட்டி கிளையின் சார்பில், கிரீன்லண்ட்ஸ் ஓட்டல் தோழர் எஸ். கே. சுந்தரராசன் தலைமையில் பிரியாவிடைக் கூட்டம் நடைபெற்றது. தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. இத்துடன் 1500 மைல் சுற்றுப்பிரயாணம் முடிந்தது.

வழியனுப்பு

இரவு 8 மணிக்கு கோட்டை இரயில்வே ஸ்டேஷனில் நூற்றுக்கணக்கான தோழர்கள் சூழநின்று ஆரவாரப் பேரொலிகளுக்கிடையே தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியை வழியனுப்பி வைத்தனர்.

இமாசல பிரதேசத்தில் நிலச் சீர்திருத்தம்

குடியரசுத் தலைவர் ஒப்பம்

இமாசலப் பிரதேச மாநிலத்தில் நிலச் சீர்திருத்தம் செய்வதற்காக குடியரசுத் தலைவர் தனது ஒப்புதலைத் தந்துவிட்டதாகத் தெரிகிறது.

ஒப்புதல் பெறப்பட்டுள்ள சட்டப்படி, இமாசலப் பிரதேச மாநிலத்தில் உள்ள எல்லா பெரிய எஸ்டேட்டுகளையும் குத்தகைதாரர்களுக்குத் தருவது, விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவது போன்ற ஆபத்துக்களைத் தடுப்பது,, உழுபவர்களாயுள்ள விவசாயிகள் தகுந்த நஷ்டஈடு தந்துவிட்டு, நிலங்களைத் தங்கள் உடைமையாக்கிக் கொள்ளுதல் போன்றவற்றிற்கான வழிவகைகளைக் கொண்டதாயிருக்கும் என்று தெரிகிறது.

நில உடைமைக்கும் அந்தச் சட்டம் வரம்பு நிர்ணயித்துள்ளது.

வருடத்திற்கு நிலவரி ரூ.-125-க்கு மேற்படாது வரி விதிக்கக்கூடிய அளவு நிலம் மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்று அச்சட்டம் கூறுகிறது. அதன்படி, அதற்கு அதிகமாயுள்ள நிலங்களுக்குத் தகுந்த நஷ்டஈடு தந்துவிட்டு, சர்க்கார் அவற்றை ஏற்றுக்கொள்வது பற்றியும் சட்டம் குறிப்புக் காட்டியிருக்கிறது.

இது, உண்மையில், நிலச் சீர்திருத்தப் பணியில் போற்றத்தக்கது எனக் கருதப்படுகிறதாம்.

இருளப்பக்கோனர் நினைவுப் படிப்பகம்

மதுரை இராமாயணச்சாவடித் தெருவிலுள்ள, திரு. இ. ராம. இருளப்பக் கோனர் நினைவுப் படிப்பகத்தைப் பார்வையிட்டுச் செல்ல 29—11—54ல் தோழர்கள் மு. கருணாநிதி, எஸ்.எஸ்.ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் படிப்பகத்துக்கு வந்து, தோழர் ரெங்கசாமியின் இம்முயற்சியைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

அறிவு – இயக்க மன்றம்

23—11—54 மாலை 7-30 மணிக்கு சென்னை - அமைந்தகரையிலுள்ள மேற்படி மன்றக் கட்டிடத்தில் திரு. அ. இளம்வழுதி தலைமையில் வ. உ. சிதம்பரம் நினைவு நாள் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் செ. து சஞ்சீவி, அ. பாண்டியன், செ. கதிரவன், ச. இராமசாமி, து. ரா. சுந்தரமூர்த்தி, தமிழ்தாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், புதிய விமான நிலையங்களையும், விமானமிறங்கும் பாதைகளையும் கட்டுவதற்காக இதுவரை மொத்தம் 15.53 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

பட்டம் தாணுவிற்கு கண்டனம்

தூத்துக்குடி, டிச. 5—

திரு-கொச்சி தமிழர்கள் மீது பட்டம் தாணு சர்க்கார் கையாண்டு வரும் அடக்குமுறைக் கொடுமைகளைக் கண்டிக்க, இங்குள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று கூடி, தங்கள் கண்டனத்தைத் தெரிவித்துக்கொண்டன.

3-ந் தேதி யன்று மாலை வ. உ. சி. மைதானத்தில், காங்கிரஸ் தலைவர் ஏ. பி. சி. வீரபாகு தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றில், சகல அரசியல் கட்சியினரும் கலந்துகொண்டு தங்கள்கண்டனங்களைத் தெரிவித்தனர்.

தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். எஸ். சிவசாமியும், கம்யூனிஸ்டு கட்சி சார்பில் தோழர் முருகானந்தமும், தமிழ்ரசுக் கழகச் சார்பில் மாடசாமியும், சோஷலிஸ்டு கட்சி சார்பாக தோழர் காசிவிஸ்வநாதனும், காங்கிரஸ் சார்பில் மேகநாதனும் கூடி அதில் கலந்து கொண்டனர்.

திரு-கொச்சியிலுள்ள 9 தமிழ் தாலுகாக்களைத் தமிழகத்துடன் இணைத்துவிடவேண்டுமெனவும், இதற்கான இணைப்புப் போராட்டத்தில் தொடரப்பட்ட வழக்குகளை திரு—கொச்சி சர்க்கார் திரும்பிப் பெற்றுக்கொள்ளுமாறும் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் துறந்த தோழர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு தருமாறு கோரிக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், பட்டம் தாணு சர்க்காருக்குக் காங்கிரஸ் கட்சி காட்டி வரும் ஆதரவை உடனடி நிறுத்திக் கொள்ளுமாறு அகில இந்திய காங்கிரஸ் குழுவைக் கேட்டுக் கொண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஊராண்மைக் கழகத் தேர்தல்

30—11—54ல் நடைபெற்ற சமயநல்லூர் (மதுரை மாவட்டம்) ஊராண்மைக் கழகத் தேர்தலில், திரு. பூசைத் தேவர் தலைவராகவும், உறுப்பினர்களாக திருவாளர்கள் இராமர், வீரணன், வெள்ளைச்சாமி, சிவலிங்கம், வீரசுந்தரம், கந்தசாமி, வேதமுத்து ஆகியவர்கள் போட்டியின்றியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்று மாலை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு திரு. எட்வின் தேவதாஸ் முன்னிலையில் தேனீர் விருந்து ஒன்று நடைபெற்றது. மாசிலாமணி, சிங்காரவேல், அடைக்கலம், ஏ. கே. சிவசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கொண்டயம்பட்டி பஞ்சாயத்துப்போர்டு தேர்தல்

29—11—54ல் நடைபெற்ற இவ்வூர் பஞ்சாயத்துப் போர்டு தேர்தலில், கழகத் தோழர்களான க. துரைசாமி, சோ. வெள்ளைச்சாமி, அ. இராமலிங்கம், ப. வையாபுரியும், கழக ஆதரவாளரான கே. கே. இராசாங்கம் ஆகியோர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மற்றும் இரு இடங்களுக்கு காங்கிரஸ் உறுப்பினர் பெ. சின்னச்சாமியும், சுயேச்சை உறுப்பினர் க. நல்லண்ண கவுண்டரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவள்ளுவர் நாடக - மன்றம் துவக்கம்

1—12—54ல், மணப்பள்ளியில் (சேலம் மாவட்டம்) தோழர் எம். ஏ. கருப்பய்யா தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்றத் துவக்க விழாவில், மன்றத்தின் சார்பில், "சூழ்ச்சி" என்னும் சமூக சீர்திருத்த நாடகத்தைப் பொங்கலன்று நடத்துவதென்றும், படிப்பகம் ஒன்று உருவாக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

"குறைகளை நீக்க முன்வாருங்கள்"

அதிகாரிகளுக்கு வேண்டுகோள்

"சர்க்கார் டிரான்ஸ்போர்ட் சென்டிரல் ஒர்க்ஷாப் தொழிலாளர் குறைகளைத் தீர்க்க சில ஆண்டுகளுக்கு முன்னமேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் சர்க்காருக்கும் அறிவித்திருந்தும், இது வரை யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தால், தொழில் தகராறு சட்டத்தின் கீழ், இக்குறைபாடுகளை உடனடியாக ஒரு மாதத்துக்குள் நீக்க வேண்டுமெனவும், இன்றேல், தொழிலாளர் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் போராட்டம் நடத்துவர் என்றும், அப்போராட்டத்துக்கான குழு ஒன்று கூட்டப்பட்டு போராட்ட நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்யு"மென்றும், தோழர் ஜி. எம். மதுரையார் அறிவிக்கிறார்.

சொக்கலால் உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழா

முக்கூடல், டிச. 3—

28-11-54ல், திரு. வரத இரகுநாதய்யர் தலைமையில் பள்ளியின் ஆண்டுவிழா நடைபெற்றது. மாலை 2½மணிக்கு மாணவர் விளையாட்டுப் போட்டி ஆரம்பமாயிற்று. பல மாணவ, மாணவிகள் போட்டியில் கலந்துகொண்டனர். ஆசிரியர்களுக்குள் நடைபெற்ற நடைப் போட்டியில் தலைமை ஆசிரியர் திரு. கணபதி வெற்றியடைந்து முதற் பரிசு பெற்றார்.

இரவு 9-30 மணிக்கு, பள்ளி மாணவர்களால் 'இதய ஒலி' என்னும் நாடகம் நடைபெற்றது. ஏராளமான மக்கள் நாடகத்தைக் கண்டு களித்தனர்.

வாழ்க்கை ஒப்பந்தம்

18-10-54ல் குள்ளக்காபாளையம், தி. மு. க. துணைச்செயலாளர் தோழர் சு. நடராசு—தோழியர் லீலாவதி வாழ்க்கை ஒப்பந்தத்தின் போது கழகச் சார்பில் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டதுடன், 29—11—54ல் தேனீர் விருந்தும் நடைபெற்றது.

பிறப்பு

சோழவந்தான் வட்டாரம், வடுகப்பட்டியைச் சேர்ந்த தோழர் இரெ. ஜனார்த்தனம் அவர்களது துணைவியார் தோழியர் செங்கை வேணி அம்மையாருக்கு 21-11-54 அன்று ஒரு பெண் மகவு பிறந்தது. தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றி—பொறுப்பாளர்.

இடமாற்றம்

"கோவை, 29-வது வட்டம் தொறையர் வீதியிலுள்ள அழகிரி நினைவுப் படிப்பகம், தற்போது 29-வது வட்டம் ஒக்கலியர் காலனியில் அமைக்கப்பட்டிருக்கிறது," என அறிவிக்கப்படுகிறது.

* * *

சென்னை பெரம்பூர் ராகவாச்சாரி தெரு, எண். 14-ல் இருந்து வந்த சென்னை கூவரத் தொழிலாளர் சங்கக் கட்டிடம், அதே தெரு 26/81 எண்ணுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அனுதாபம்

29—11—54 மாலை 4 மணிக்கு பெங்களூர் இலக்குமணபுரி, தி. மு. கழக நிர்வாக உறுப்பினர் ஜே. ஏகரத்தினம் அவர்களின் ஆண் குழந்தை மரணமுற்றது குறித்து எங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என, மேற்படி கழகச் செயலாளர் தோழர் மு. கிருட்டிணன் அறிவிக்கிறார்.

முகவரி மாற்றம்

காஞ்சில் பி. ஈ. கண்ணப்பா,
தி. மா. மு. கழகச் செயலாளர்,
83, திருவள்ளுவர் வீதி,
அண்ணாமலை நகர், சிதம்பரம்.

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தை ஆராய குழு நியமனம்

தவணைகளில் கடனைச் செலுத்த சட்டம் திருத்தப்படும்?

சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் நிலவிய கருத்து

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தை ஒத்தி வைப்பதால், விவசாயம் வெகுவாகப் பாதிக்கப்படுமென்றும், குறிப்பிட்ட சில தவணைகளில் கடனைத் திருப்பித் தருமாறு செய்து விவசாயிகளுக்கு உதவி செய்யலாம் என்றும் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் கருத்து நிலவியதாகத் தெரிகிறது.

சென்னை, டிச 6—

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தை நீடிப்பது பற்றி ஆதரவாகவும், அதற்கு எதிராகவும் நேற்று நடைபெற்ற சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் கருத்துகள் தெரிவிக்கப் பட்டனவாம். ஒரு மணி நேர விவாதத்திற்குப் பின்னர், இப்பிரச்சினை பற்றி ஆராய்ந்து அறிக்கை தருமாறு பதினேறு பேர்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

கடன் நிவாரணச் சட்டத்தினால், கிராமப்புறங்களில் கடன் வசதிகள் வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளது என்ற கருத்தை பலர் எடுத்துக் கூறி, இச்சட்டத்தை நீடிப்பதை பலர் எதிர்த்தனராம். ஆனால் சில மாறுதல்களுடன், நிவாரணம் உண்மையாக தேவைப் படும் சந்தர்ப்பங்களில் அது கிடைக்குமாறு வகைசெய்யப்பட வேண்டுமென்று பலர் கருத்தறிவித்தனராம்.

விவசாயிகளுக்கு நிவாரணம் தேவை என்ற உணர்ச்சி உறுப்பினர்களிடையே பொதுவாக நிலவியது என்றாலும், இதுவரை இருந்துவந்ததுபோல், பொதுப் படையாக இருக்கக்கூடாது என்பதும் எடுத்துக்காட்டப்பட்டதாம்.

கடன் நிவாரணச் சட்டத்தை நீடிக்க வேண்டுமென்றால், தேவைப்படும் இடங்களில் வட்டியும் முதலுடன் பல தவணைகளில் செலுத்தும் வகையில், சட்டத்தில் மாறுதல் தேவை என்று உணரப் பட்டதாம்.

நிவாரணம் என்றால் என்னவென்று சரியாக விளக்கப்படவில்லை என்றும், அந்த நிவாரணமும், தேவைப்படும் சந்தர்ப்பங்களுக்கு மட்டுமே அளிக்கப்படும் நிலை இல்லை என்பதையும், கிராமங்களில் உள்ளவர்கள் கடன் வசதிகளைக் கட்டுப்படுத்த அனுமதிக்கக் கூடாது என்றும் கூட்டத்தில் பலர் வற்புறுத்தினார்களாம்.

இந்த ஆண்டில் பயிர்கள் பாழடைந்து போகும் நிலை ஏற்பட்டிருப்பதால், கடன் வசதிகளின் தேவை அதிகமாகிறது என்றும், ஆகவே, இதுபோன்ற சந்தர்ப்பங்களில் இப்போதுள்ள சட்டத்தை மாற்றம் ஏதும் இல்லாது நீடிப்பது ஏழை விவசாயிகளின் நலனுக்கு உகந்ததல்ல என்றும் ஒரு உறுப்பினர் எடுத்துக் காட்டினராம்.

“விவசாயக் காரியங்களுக்கு அல்லாது, வேறு காரியங்களுக்குக் கடன் வாங்கியோருக்குச் இச்சட்டத்தில் நிவாரணம் கிடைக்காது செய்ய வேண்டும் என்றும், தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தை மட்டுமே நம்பியிராமல், நிலம் வைத்திருக்கும் பெரும் வியாபாரிகளுக்கும் இதன் மூலம் நிவாரணம் அளிக்கக்கூடாது என்றும் பலர் வற்புறுத்தினார்கள் என்று தெரிகிறது.

“கூட்டுறவுக் கழகங்கள், போதுமான அளவு விவசாயிகளுக்குக் கடன் வசதி அளிக்க இயலாதிருக்கின்றன; அதே நேரத்தில், சர்க்காரும், விவசாயிகளைக் காப்பாற்ற முன்வருவது கிடையாது; இந்த நிலைமையில், கடன் வசூல் செய்வதை இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திப்போடுவதில் அர்த்தமேதும் கிடையாது; அதனால் விவசாயம் பாதிக்கப்படும்,”— என்றும் கூட்டத்தில் கூறப்பட்டதாம்.

ஆகவே, கடன் கொடுத்தோரைக் கட்டுப்படுத்தி, மூன்று அல்லது நான்குதவணைகளில் கடனைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளுமாறு செய்வது நலம் பயக்கும் என்று பலர் ஆலோசனை கூறினார்களாம்.

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தை நீடிப்பது அவசியமா? அவசியமென்றால், எப்படி, எந்த முறையில் நீடிப்பது என்று ஆராயுமாறு இப்பிரச்சினைக்காக நியமிக்கப்பட்ட குழு கேட்கப்பட்டிருக்கிறது.

தோழர்கள் என். கோபால மேனன், ஜி. நாராயணசாமி நாயுடு, பி. எம். முனுசாமி கவுண்டர், வி. கே. பழனிசாமி கவுண்டர், கே. ஆர். விஸ்வநாதன், எம். ஜெகநாதன், பி. வைகுந்த பலிகா, வி. சி. பழனிசாமி கவுண்டர், சி. சுப்பிரமணியம், எம். ஏ. மாணிக்கவேலு நாயக்கர், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்கள் என்று தெரிகிறது.

பார்மோசா: இந்தியாவின் திட்டம்

“பார்மோசா தீவில் உள்ள சீனர்கள், கம்யூனிஸ்டு சீனவுடன் சேர விரும்புகிறார்களா, இல்லையா என்று ஒரு பொது வாக்கெடுப்பு நடத்துவதற்காக பார்மோசாவை ஒரு சர்வதேச குழுவிடம் ஒப்படைக்கவேண்டும்,” என இந்தியா, அமெரிக்க இராஜாங்க இலாகாவிடம் ஒரு யோசனை சமர்ப்பித்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அமெரிக்கா இதை ஏற்றுக்கொள்வதென்பது சுலப சாத்தியமானதல்ல.

“பார்மோசா விஷயத்தில் சர்வதேச பேரத்திற்கு இடமில்லை,” என்று சென்ற வியாழனன்று டல்லஸ் கூறியிருப்பது குறிப்பிடத் தகுந்தது.

பர்மா முன்னாள்..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திய சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜப்பானியர் வசமிருக்கும் பர்மாவின் அரசாங்கத் தலைவரான டாக்டர் பா-மாவ் என்பவர் உள்ளிட்ட எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் கைதானவர்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என்று தெரிகிறது.

நீதிமன்றத்தில் யூ-பா-பே மீதுள்ள குற்றச்சாட்டுகளை எதிர்த்து,அவருக்காக தான் வாதாடத் தயாராயிருப்பதாக டாக்டர் பா-மாவ் கூறியிருக்கிறாராம்.

மேலும், யூ-பா-பே விரும்பினால் இங்கிலாந்தில் உள்ள பிரபல வழக்கறிஞரான டி. என். பிரிட் என்பவரையும் அழைத்து வந்து வாதாடத் தயாராயிருப்பதாயும் அவர் கூறியுள்ளாராம்.

1953-ல், இந்திய ரயில்வேக்கள், மொத்தம் 1,04,25,007 டன் நிலக்கரியை உபயோகித்தன.

கணவனுக்கு மனைவி ஜீவனும்சம் தரும் பிரச்சினை

தனிக் குழுவின் சிபாரிசை இந்திய சர்க்கார் எதிர்க்கிறது

திருமண வயது உயர்வு எதிரொலி—குழந்தை மணத் தடைச் சட்டம் திருத்தப்படும்

இந்து திருமண, மணவிலக்கு தனிக் குழுவின் அறிக்கையை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள ராஜ்ய சபையில், வர்த்தக மந்திரி கார்மார்க்கர் பிரேரேபித்தார்.

திருமண வயதை ஆண்களுக்கு 18-லிருந்து 21 ஆகவும், பெண்களுக்கு 15-லிருந்து 16 ஆகவும் உயர்த்த வேண்டுமென்பது தனிக் குழுவின் சிபாரிசுகளில் ஒன்றாகும். இந்த சிபாரிசை மக்கள் சபை ஏற்றுக் கொள்ளுமானால், 1929 பால்யத் திருமணத் தடைச் சட்டமும் அதற்கொப்ப திருத்தியமைக்கப்படும் என்று கார்மார்க்கர் தெரிவித்துள்ளார்.

கணவனுக்கு மனைவியும் ‘ஜீவனும்சம்’ தரவேண்டுமென்ற சிபாரிசை மந்திரி கார்மார்க்கர் எதிர்த்தார்.

“ஜீவனும்சம் என்ற பொருளுக்கே இது விரோதமானது; தவிரவும், சொத்து விஷயத்தில் பெண்களுக்கு சம உரிமை இல்லாத வரை இந்த சிபாரிசு ஏற்றுக்கொள்ள முடியாததாகும்,” என்றும் அவர்களுக்குத் தெரிவித்தார். எனவே, அசல் ஷரத்தையே சபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் கோரினர்.

திருமணத்தின்போது மணப்பெண் கர்ப்பவதியாக இருந்தால், விவாகரத்துக்கு அதை ஒரு காரணமாகக் கொள்வதற்கு திருத்தம் கொண்டு வந்தால், அதை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் சித்தமாயிருப்பதாகவும் மந்திரியார் கூறியிருக்கிறார். இப்பிரரேபணை மீது விவாதம் இன்னும் ஆரம்பமாகவில்லை.

நேர் ரயில் போக்குவரத்து

இந்தியா—பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையே நேர் ரயில் வண்டிப் போக்குவரத்து நடத்துவதின் சாத்தியக் கூறுகளை இரு அரசுகளும் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றனவாம்.

இப்போது, லாகூருக்கும், அமிர்தசரசுக்குமிடையில் ‘ஷட்டில்’ ரெயில் போக்குவரத்து மட்டுமே உள்ளது.

சென்னை சட்டசபையில்....

☆

ஆந்திரா—சென்னை எல்லைத் தகராறு

சென்னை, டிச. 6—

“ஆந்திரா—சென்னை எல்லைத் தகராறுகளுக்கு முடிவு காண உண்மையிலேயே சென்னை அரசாங்கம் விரும்புகிறதா? அல்லது தமிழர்களின் கதியை ஆந்திரர்களே நிர்ணயித்துக்கொள்ள விட்டு விடப்போகின்றனரா? சென்னை சர்க்கார் தரும் கருத்துக்கள் எல்லாம் ‘கழுதைக்கு முன்பு காட்டப்படும் காரட் கிழங்கைப் போன்றதுதானா?’ என்று ஒரு அங்கத்தினர் சட்டசபையில் கேள்வி கேட்டார்.

இதற்கு பதிலளித்த நிதி மந்திரி, “அங்கத்தினர் தன்னை கழுதை என்று வர்ணித்துக்கொண்டார்—அதை நான் எதிர்க்கிறேன்; இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல,” என்று குறிப்பிட்டார்.

கேள்வி கேட்ட அங்கத்தினர் விநாயகம், ‘கழுதைக்கு முன்பு காட்டப்படும் காரட் கிழங்கு,’ என்பது, ஆங்கிலத்தில் ஒரு நல்ல வார்த்தைப் பிரயோகம்; “நான், என்னை கழுதை என்று சொல்லிக் கொள்வதாக மந்திரி நினைக்க வேண்டாம்” என்று குறிப்பிட்டார்.

(“அழுத பிள்ளைக்கு வாழைப் பழம் தருவது” என்ற தமிழ் பழமொழியின் நேரிடையான ஆங்கில பிரயோகத்தைத்தான் திரு. விநாயகம் குறிப்பிட்டிருக்கிறார்.)

தமிழ் ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்வு

உயர்நிலைப் பள்ளிகளில் இதர ஆசிரியர்களுக்குச் சமமாக, தமிழ் ஆசிரியர்களின் அந்தஸ்தை உயர்த்துவது பற்றி சர்க்கார் பரிசீலித்துவருவதாக கல்வி மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் தகவல் தந்தார்.

நிலச் சீர்திருத்தம்

“நிலச் சீர்திருத்தம் பற்றிய சர்க்காரின் ஆலோசனை இன்னும் முடிந்தபாடில்லை; ஆலோசனை முடிந்ததும், இதுபற்றி தகுந்த சட்டம் ஒன்று இயற்றப்படும்,” என்று கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், நில வரி மந்திரி மாணிக்கவேலர் தெரிவித்தார்.

அவசரப் பிரேரணைக்கு அனுமதி மறுப்பு

“வடக்கு மலையாளத்தில் உள்ள பாரம்பராவில் காத்தாளி எஸ்டேட்டில் ஏராளமான பேர்கள் கைது செய்யப்படுவது பற்றி விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும்,” என்று ம. சோ. கட்சி அங்கத்தினர் ஒருவர் கொண்டுவந்த அவசரப் பிரேரணையை சபைத் தலைவர் நிராகரித்தார்.

சர்க்காரின் பதிலும், உருவாகியுள்ள நிலையும், அதிருப்திகரமானதாயிருப்பதால், தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் வகையில், சபையிலிருந்து வெளியேறுவதாக, டாக்டர் கே.பி. மேனன் கூறினார். 13 பி. - சோ. அங்கத்தினர்களும் வெளியேறிவிட்டனர்.

உபகாரச் சம்பளம்

மாநில வருமானத்திலிருந்து 122 பேர்கள் அரசியல் உபகாரச் சம்பளம் (பென்ஷன்) பெறுகின்றனர் என்று ரெவினியூ மந்திரி மாணிக்கவேலர் தகவல் தந்தார்.

உபகாரச் சம்பளம் பெறுவோர் முன்பிருந்த வெள்ளையராட்சியிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை, நாம் மதித்து நடக்கவேண்டியுள்ளது என்றும், இந்த உபகாரச் சம்பளத்திற்கும், தியாகிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் மந்திரியார் கூறியுள்ளார்.

இதன்படி குறைந்தபட்சம் 75—13—4 ரூபாயும், அதிகபட்சம் 69,663—4—0 ரூபாயும் தரப்படுகிறது என்றும் இந்த தலைப்பின் கீழ் மொத்தம் தரப்படும் தொகை ரூ. 3,06,123—12—0 என்றும் அவர் விபரங்கூறினர்.

“கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நாட்டை விட்டுக்கொடுக்கும் வகையில் நடந்துகொண்டவர்களுக்கு இன்னும் உபகாரச் சம்பளம் தருவதா?” என்று கேட்டதற்கு, ஒப்பந்தங்களுக்கு சர்க்கார் மதிப்புத் தரவேண்டியுள்ளது என்றும், உபகாரச் சம்பளம் பெறுபவர் உயிருடன் இருக்கும் வரையில் இந்தச் சம்பளம் தரப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரெஞ்சிந்திய விடுதலை

“முன்னாள் பிரெஞ்சிந்தியப் பகுதிகளுக்கு விடுதலை கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு கம்யூனிஸ்டுகளே காரணம்; கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் இல்லாமலிருந்தால் இன்னும் சீக்கிரமாகவே அப்பகுதிகளுக்கு விடுதலை கிடைத்திருக்கும்,” என்று மந்திரி சுப்பிரமணியம் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கடன் கேட்கமாட்டோம்

சென்னை மாநிலத்தில் அத்தியாவசியமான மூலதன திட்ட செலவுகளுக்குத் தேவைப்படும் தொகையை இந்தியப் பேரரசு தாங்கள் எழுப்பியுள்ள தேசிய கடனிலிருந்து தர ஒப்பியுள்ளபடியால், முன் அறிவித்தபடி இவ்வருடம் சென்னை அரசாங்கம் கடன் வாங்க வேண்டியதில்லையென சென்னை சர்க்கார் முடிவு செய்து, அதை ஏற்கனவே அறிவித்துள்ளது என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலாக நிதி மந்திரி கூறியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர் போராட்டம் நீடிக்கிறது

மத்திய இலங்கையில் 25,000 பேர்கள் அனுதாப வேலைநிறுத்தம் செய்வர்

கொழும்பு, டிச. 6—

இலங்கையின் முக்கிய தோட்டமான தாமரியா தோட்டத்தில் தொழிலாளர் வேலை நிறுத்தம் நடைபெறுவதை ஆதரித்து அனுதாபம் தெரிவிக்கும் முறையில் நுவரேலியாவில் 25,000 தோட்டத் தொழிலாளர்கள் சீக்கிரமே வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று தெரிகிறது.

பதுளையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இது பற்றிய முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தோட்டக் காவலாளி ஒருவன் தொழிலாளர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை ஒட்டி, தாமரியாவில், 1,000 தொழிலாளர்கள் இரண்டு வாரங்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

ஹை எஸ்டேட்டுகளில் சென்ற ஆறு வாரங்களாக, நீக்கப்பட்ட யூனியன் தொழிலாளர்களை திரும்பவும் வேலைக்கு அமர்த்த வேண்டுமென்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் கூலி உயர்வு பற்றியும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆலோசிக்கிறது என்று தெரிகிறது.

உண்ணாவிரதம்!

தூத்துக்குடி துறைமுகத் தொழிலாளருக்கும் — அதிகாரிகளுக்குமிடையேயுள்ள தகராறுகளைத் தீர்த்துவைக்க துறைமுகத் தொழிலாளர் ‘கண்டிராக்டர்’ன் மனதை மாற்றச் செய்யும் நோக்குடன், அத்துறைமுகத் தொழிலாளர் யூனியனின் துணைத் தலைவர் நல்லய்யா கோமெஸ் என்பவர், சென்ற புதன்கிழமை நண்பகல் 12 மணியிலிருந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார் எனக் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.